2012 ஏப்ரல் 16] [திரு. கே.ஏ. ஜெயபால்]

உண்மையாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பாராட்ட வேண்டும். அந்த அளவுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) ஒட்டப்பிடாரம் தொகுதி, புலிப்பாய்ஞ்சான்குளம், வைகுண்டபதி பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை ஏலம் விடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். நீங்கள் என்ன பிரச்சினையைப் பற்றிப் பேசப் போகிறீர்கள்? What is your issue?

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட புலிப்பாய்ஞ்சான்குளத்தில், வைகுண்டபதி பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான 247.62 ஏக்கர் நிலத்தில், இப்பொழுது 55 ஏக்கர் நிலத்தை ஏலம் விடுவதுதான் நான் எழுப்ப விரும்பும் கவன ஈர்ப்பாகும். இறை பக்தி நிறைந்த நிலச்சுவான்தார் ஒருவர் தூத்துக்குடி, வைகுண்டபதி பெருமாள் கோயிலுக்கு 247.62 ஏக்கர் நிலத்தைத் தானமாக வழங்குகிறார்கள். அந்த நிலம் சில தனியாருக்குக் குத்தகைக்கு விவசாயப் பயன்பாட்டிற்காகக் கொடுக்கப்படுகிறது. நாளடைவில் அனுபவ உரிமை என்ற வகையில் அந்த 247.62 ஏக்கர் நிலத்தையும் குத்தகைதாரர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். ஆனால், இந்த நிலத்தை இந்து சமய மற்றும் அறநிலையத் துறை . . .

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் 11—25. மானியக் கோரிக்கைக்குப் போக வேண்டும். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி முடியுங்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: இந்து சமய மற்றும் அறநிலையத் துறை இதுகுறித்து நீதிமன்றத்திலே முறையாக வாதாடுவதற்குத் தவறியதன் விளைவாக இப்பொழுது 192.62 ஏக்கர் நிலம் தனியார் ஒருவருக்குச் சென்றுவிட்டது. வெறும் 55 ஏக்கர் நிலம் மட்டுமே வைகுண்டபதி கோயிலுக்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்?*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *இப்பொழுது தூத்துக்குடியில் நிலத்தினுடைய மார்க்கெட் மதிப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த நிலத்தின் விலை ஒரு ஏக்கர் நிலம் தற்போது 5 கோடி ரூபாய். ஆனால், 20 இலட்சம் ரூபாய் மட்டுமே– இப்பொழுது வழிகாட்டுதல் மதிப்பீடு. 50 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போயிருக்கிறது. எனவே, அந்த நிலத்தை இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையே ஏலத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியாருக்கு அந்த நிலங்கள் போய்விடக்கூடாது. இப்பொழுது பொன்னைக் காட்டிலும் மண்ணுக்குத்தான் விலை அதிகம். எனவே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை தனியார் அபகரிப்பதற்கு இந்த அரசு அனுமதிக்கக் கூடாது. எனவே, இதுகுறித்து தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சங்கரபேரி கிராமம், புலிப்பாய்ஞ்சான்குளம், அருள்மிகு வைகுண்டபதி பெருமாள் திருக்கோயிலுக்கு 247.62 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இந்நிலம் தேவதாயம் என வகைப்படுத்தப்பட்டு, மேல்வாரம் மற்றும் குடிவாரம் என்ற இரு தன்மைகளும் அடங்கிய இனாம் நிலங்களாகும். இந்நிலத்திற்கான உரிமைப் பட்டய எண் 1139. இந்நிலத்திற்காக ரயத்துவாரி பட்டா மற்றும் நில உரிமை ஆகியவை திருக்கோயில் பெயரில் வழங்கப்பட்டன. இதன் தொடர்பாக நிலத்தின் மீதான உரிமை கோரி பல்வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றன. இறுதியாக திருக்கோயில் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில்* Civil Appeal *எண் 4448/1999 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. மொத்த நிலத்தில் (247.62 ஏக்கர்) ஐந்தில் ஒரு பகுதி நிலத்தின் மதிப்பு அல்லது ரூபாய் 15 இலட்சம் தொகையைத் திருக்கோயிலுக்கு வழங்கிட வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தின் கருத்தினை உச்ச நீதிமன்றம் பரிசீலித்தது. இதன் அடிப்படையில்*

2012 ஏப்ரல் 16] [திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்]

மொத்த நிலத்தில் 55 ஏக்கர் நிலத்தினைப் பிரித்து அளவீடு செய்ய திருநெல்வேலி மாவட்ட நீதிபதி முன்னிலையில் பொது ஏலத்தில் விட்டு, அத்தொகையினைத் திருக்கோயில் பெயரில் நிரந்தர முதலீடு செய்யுமாறு உச்ச நீதிமன்றம் 22–2–2001இல் உத்தரவு வழங்கியது. மீதமுள்ள 192.62 ஏக்கர் நிலத்தை எதிர் மனுதாரர்கள் கூட்டாக தங்கள் வசம் வைத்துக்கொள்ளுமாறு உத்தரவும் வழங்கியுள்ளது. இந்நிலத்திற்கான வழிகாட்டி மதிப்பு ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 10 இலட்சம் ஆகும். இம்மதிப்பினை இரு மடங்கில் ஏக்கர் ஒன்றிற்கு 20 இலட்சம் என அடிப்படைக் கேள்வியாக வைத்து, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி 21–3–2012 அன்று பிற்பகல் 3–00 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில், தூத்துக்குடி மாவட்ட நீதிபதி அவர்களால் நிலத்திற்கான பொது ஏலம் நடத்தப்பட்டது. ஏலத்தில் 17 பேர் கலந்துகொண்டனர். ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 51 இலட்சத்து 81 ஆயிரம் வீதம் உயர்ந்த கேள்வியாகக் கேட்கப்பட்டது. இதன் அடிப்படையில் 55 ஏக்கருக்கு ரூபாய் 28 கோடியே 51 இலட்சத்து 71 ஆயிரம் தொகைக்கு சென்னையைச் சேர்ந்த திரு. எஸ்.எம். மூர்த்தி என்பவரால் உயர் கேள்வியாகக் கேட்கப்பட்டது. பொது ஏலத்தின் முடிவில் உயர் தொகையினைக் கேள்வியாகக் கேட்கப்பட்டுள்ள நபரால் ரூபாய் 6 கோடி தொகையை நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது. எஞ்சிய தொகையினை ஏல விற்பனைக்கான நிபந்தனையின்படி 15 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்தப்பட வேண்டும். இதனிடையே மேற்படி பொது ஏலம் தொடர்பான நடவடிக்கையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளையில் C.R.P. மனு எண் 703/12 தாக்கல் செய்யப்பட்டது. இதில் M.P. No. 1/2012, C.R.P.(MD) 703/12, நாள் 21–3–2012இல் இரு வார காலத்திற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பான விசாரணை 4–4–2012 வரப்பெற்றது. இதன் தொடர்ச்சியாக 10–4–2012 மற்றும் 12–4–2012 ஆகிய தேதிகளில் இவ்வழக்கு விசாரணைக்கு வரப்பெற்றது. திருக்கோயில் மற்றும் மனுதாரர் தரப்பில் வாதங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வழக்கினை மீண்டும் 16–4–2012, அதாவது இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினைத் தங்கள்வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Sit down Doctor. This matter is pending before the Court. Please sit down. *நீங்கள் எனது அறைக்கு வாருங்கள், அங்கே நாம் பேசலாம்.*

3. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வல்லமை தாராயோ, இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்று பாடிய மகாகவி பாரதியின் வழி நின்று, தமிழக முதல்வராகப் பணியாற்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 16 முதல் 19 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக, இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை

ஆ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(அ) கோரிக்கை எண் 41– வருவாய்த் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*